**சார்பு நீதிமன்றம், நெய்வேலி**

**MCOP.No. 69 /2024 C/W MCOP.No. 91/2024**

பெயர் : திரு. தண்டபாணி (ம.சா.1)

தந்தை பெயர் : திரு. கணேசன் தொழில் : Building contract

கிராமம் : தோப்புக்கொல்லை

தாலுக்கா : குறிஞ்சிப்பாடி வயது : 61

தேதி : 30.07.2026

**2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 30-ம் நாளாகிய இன்று சாட்சியாக ம.சா.1 இன் வாக்குமூலம் (1873-ம் ஆண்டின் 10 ஏற்பாட்டின் படி) திரு.P.முருகன், பி.ஏ., எல்.எல்.பி., சார்பு நீதிபதியாகிய என்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை:-**

நான் MCOP.No. 69 /2024-ல் மனுதாரர் மற்றும் ம.சா.1 ஆவேன், எனது தரப்பு முதன்மை சாட்சியத்திற்கு பதிலாக சத்திய பிரமாணவாக்குமூலத்தை தாக்கல் செய்திருக்கிறேன். அதில் சொல்லியுள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து அந்த சங்கதிகளை நான் புரிந்துகொண்டு சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்திருக்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனது தரப்பு சான்றாவணங்களாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 13 வரை உள்ள ( **1) முதல் தகவல் அறிக்கை நகல் (குள்ளஞ்சவாடி காவல் நிலைய குற்ற எண்: 2/2024), 2) விபத்து பதிவேடு நகல் - கடலூர் சுரேந்திரா மருத்துவமனை, 3) காயச்சான்று நகல் - கடலூர் சுரேந்திரா மருத்துவமனை, 4) டிஸ்சார்ஜ் சம்மரி - கடலூர் சுரேந்திரா மருத்துவமனை D.O.A: 31.12.2023 D.O.D: 08.01.2024, 5) மருந்து பில்கள் ரூ. 1,65,619/-, 6) 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர்**

**அறிக்கை நகல், 7) 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுப் புத்தகம் நகல், 8) 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி நகல், 9) 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல், 10) மனுதாரர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல், 11) மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல், 12) மனுதாரரின் ஆதார் அட்டை நகல், 13) இறுதி அறிக்கை நகல்)** ஆவணங்களை குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன். மேற்படி ஆவணங்களானது மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ 1 முதல் ம.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகின்றன. மனுப்படி உத்தரவிட கேட்டுக்கொள்கிறேன்.

**(எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

**(ஒப்பம்/-திரு.P.முருகன், பி.ஏ., எல்.எல்.பி.,)**
**சார்பு நீதிபதி,**
**நெய்வேலி.**